# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/31 - 2015 ජුනි මස 13 වැනි සෙනසුරාදා - 2015.06.13

*1918/31 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கல்விப் பட்டயம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமத்திய மாகாண மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கௌரவ மாகாண ஆளுநரால் 1990, ஏப்பிறல் 10 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட சட்டத் திருத்தங்கள் இத்தால் சகலரும் அறிந்துகொள்வதற்காக என்னால் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.

ஆர். கே. பிரேமசிறி,<br>
செயலாளர்,<br>
வடமத்திய மாகாண மாகாண சபை.

வடமத்திய மாகாண மாகாண சபை,<br>
2015, யூன் 12.

**1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கல்விப் பட்டயம்**

வடமத்திய மாகாண மாகாணசபையின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக விதிக்கப்பட்ட ஏற்பாடுகள் உள்ளடங்கிய பட்டயம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் 9 ஆவது உப அட்டவணையில் முதலாவது பட்டியலில் மூன்றாவது உப சரத்தில் மற்றும் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கையின் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தை நிறுவுவதற்காக அதிகாரமளிக்கப்படுகின்ற பட்டயம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமத்திய மாகாண மாகாண சபை மூலம் இவ்வாறு சட்டம் விதிக்கப்படுகிறது.

1. இப்பட்டயம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமத்திய மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கல்வி பட்டயம் என அழைக்கப்படுவதுடன் ஆளுநர் அவர்களின் மூலம் அனுமதிக்கப்படுகின்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. இவ்யாப்பின் செயற்பாடுகளுக்காக மாகாணக் கல்விப் பணிபபாளர் மற்றும் காலத்திற்கு காலம் நியமிக்கப்படும் வேறு அதிகாரிகள் மற்றும் பணிக் குழுவினர் உள்ளடங்கிய கல்வித் திணைக்களமொன்று அமைக்கப்படும்.

3. (i) கல்வி அமைச்சரினால் வெளியிடப்படும் கட்டளைகள் மற்றும் நிர்வாகத்தின் கீழ் பணிப்பாளரும் ஏனைய திணைக்கள அதிகாரிகளும் செயற்பட வேண்டியதுடன் இவ் யாப்பின் ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் விதிக்கப்படுகின்ற பிரமாணங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிப்பாளர் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகளுக்கு பொறுப்பளிக்கப்படுகின்றது ;

(ii) இவ் யாப்பின் அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் மூலம் அல்லது கல்விப் பணிப்பாளருக்கு அளிக்கப்படுகின்ற அதிகாரம் அவர் மூலம் பயன்படுத்தப்படும் போது பணிப்பாளரினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அல்லது விதிக்கப்படுகின்ற கட்டளைகளை மேன்முறையீடு செய்வதன் மூலம் அல்லது அமைச்சரினால் இல்லாமல் செய்தல் அல்லது மாற்றம் செய்தல் சட்ட ரீதியானதாகும், அமைச்சரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமைவதுடன் பணிப்பாளர் மற்றும் உரிய ஏனைய சகலரும் அத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

## பகுதி I

வட மத்திய மாகாணத்திற்காக கல்வி ஆலோசனைக் குழு, கோட்ட கல்வி ஆலோசனைக் குழு மற்றும் பாடசாலை ஆலோசனைக் குழு நிறுவுதல்

4. (i) வடமத்திய மாகாணத்திற்காக முதலமைச்சரின் இணக்கத்திற்கு ஏற்ப ஏழு பேரைவிட குறையாத எண்ணிக்கையைக் கொண்ட கல்வி ஆலோசனைக் குழுவொன்று நிறுவப்படும் ;

(ii) அமைச்சர் அவர்களினால் அமைச்சின் செயலாளர் இக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார் ;

(iii) அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுகின்ற திணைக்கள அதிகாரியொருவர் குழுவின் செயலாளராக செயற்படுவார் ;

(iv) அமைச்சர் அவர்களினால் இக்குழுவிற்கு ஆலோசனைக்காக முன்வைக்கப்படுகின்ற கல்வியுடன் தொடர்பான சகல விடயங்கள் சம்பந்தமாகவும் மற்றும் குழுவினால் ஆலோசனை வழங்கப்படவேண்டுமென கருதுகின்ற சகல விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் இவ் ஆலோசனைக்குழுவின் செயற்பாடாகும் ;

(v) ஆலோசனைக் குழுவைக் கூட்டுதல், ஆலோசனைக் குழு கூட்டங்களை நடாத்துதல், கூட்டத்தின் செயற்பாடுகளை நடாத்திச் செல்லுதல், குழுக் கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய செயன்முறைகள் என்பன மாகாண சபையின் அனுமதியுடன் அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்படும் ;

(vi) ஆலோசனைக் குழுவின் எந்தவொரு அங்கத்தவரையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பதவியிலிருந்து வெளியேற்றும் அதிகாரம் அமைச்சர் அவர்களுக்கு இருப்பதுடன் ஆலோசனைக் குழுவின் எந்தவொரு அங்கத்தவரும் அமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து அப்பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம் ;

(vii) கேட்டு விலகிய அங்கத்தவர் ஒருவர் அல்லது அங்கத்துவத்தைவிட்டு வெளியேறிய அல்லது அமைச்சர் அவர்களினால் பதவியிலிருந்து விலக்கப்பட்ட அங்கத்தவர்கள் தவிர ஏனைய சகல ஆலோசனைக் குழு அங்கத்தவர்களும் அவர் முதலில் நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து இருவருட காலங்கள் அப்பதவியை வகிப்பார்.

5. (i) மாகாணத்திற்குரிய கல்விக் கோட்டங்கள் தொடர்பான வெவ்வேறு விடயங்கள், கல்வித் தேவைகள் தொடர்பாக பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைச்சர் அவர்களினால் கல்விக் கோட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படும் ;

(ii) சகல கோட்ட ஆலோசனைக் குழுக்களும் பின்வருவோரை உள்ளடக்கியிருக்கும்.

(அ) கோட்டக் கல்வி அதிகாரி ;

(ஆ) மாநகர சபையின் மாநகர பிதா, நகர சபையின் தலைவர் மற்றும் கல்விக் கோட்டத்தினுள் அடங்கும் சகல பிரதேச சபைகளின் தலைவர்கள் ;

(இ) மாநகர சபையின் ஆணையாளர், நகர சபையின் செயலாளர் மற்றும் கல்விக் கோட்டத்தினுள் அடங்கும் சகல பிரதேச செயலாளர்களும் ;

(ஈ) மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் பெயரிடப்படுகின்ற கல்விக் கோட்டத்தினுள் சேவையாற்றும் மூன்று அதிபர்கள் ;

(உ) கோட்டக் கல்வி அதிகாரியினால் பெயரிடப்படுகின்ற கோட்டத்தினுள் அமைந்துள்ள பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரிலும் கூடிய எண்ணிக்கையை கொண்டிராத மாணவத் தலைவர்கள்.

(iii) கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்வி அதிகாரி கோட்ட கல்வி ஆலோசனைக் குழுவின் தலைவராக செயற்படுவார்.

(iv) கோட்டக் கல்வி ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் குழு அங்கத்தவர்களிலிருந்து செயலாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார் ;

(v) கல்விப் பணிப்பாளர் அவர்களினால் கோட்டக் கல்வி ஆலோசனைக் குழுவிற்கு கவனத்திற் கொள்ளும்படி வழங்கப்படுகின்ற சகல செயற்பாடுகளும் குறிப்பிட்ட காலத்தில் குறித்த முறைக்கு ஏற்ப முறையாக கூட்டப்பட்டு நடாத்தப்படுகின்ற கோட்ட ஆலோசனைக் குழு கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்வுகண்டு முடிக்கப்படும் ;

(vi) யாப்பின் கீழ் எந்தவொரு கோட்டத்திற்காகவும் அமைக்கப்பட்ட கோட்ட ஆலோசனைக் குழுவிற்கு எந்தவொரு செயற்பாடு தொடர்பாகவும் நிறைவேற்று அல்லது நிர்வாக அதிகாரம் அல்லது கடமைகள் பொறுப்பளிக்கப்படவில்லை அத்துடன் பணிப்பாளர் அவர்களினால் கவனத்திற் கொள்ளும்படி கோட்ட ஆலோசனைக் குழுவிற்கு முன்வைக்கப்படுகின்ற கோட்டத்தின் கல்வி தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அக்கோட்டத்திற்குரிய கல்வித் தேவைகள் அவற்றுக்குத் தேவையான ஆலோசனைகள் அல்லது சிபாரிசுகள் தவிர வேறு எந்தவிதமான செயற்பாடுகளுக்கும் கோட்ட ஆலோசனைக் குழுவிற்கு அதிகாரமளிக்கப்படவில்லை.

6. (i) மாகாணத்தில் சகல கோட்டங்களிலும் அமைந்துள்ள சகல பாடசாலைகளுக்கும் ஆலோசனைக்குழு அமைக்கப்படும் ;

(ii) கல்விப் பணிப்பாளரினால் முன்வைக்கப்படுகின்ற அல்லது குழு பொருத்தமானது என கருதுகின்ற பாடசாலை நிர்வாகம், நிர்வாகக் கட்டமைப்பு, அபிவிருத்தி மற்றும் பாடசாலை நடவடிக்கைகளை செயற்படுத்துதல் என்பவற்றுடன் தொடர்பான சகல நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசனை வழங்குதல், பாடசாலை ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகள் ஆகும் ;

(iii) பாடசாலை ஆலோசனைக் குழுவுக்கு எந்தவொரு செயற்பாடு தொடர்பாகவும் நிர்வாக அதிகாரமோ அல்லது நிறைவேற்று அதிகாரமோ அல்லது நிர்வாக மற்றும் நிறைவேற்று செயற்பாடுகளோ பொறுப்பளிக்கப்படவில்லை ;

(iv) பாடசாலை ஆலோசனைக் குழு கீழ்வருவோர்களை உள்ளடக்கியிருக்கும். அதிபர் மற்றும் ஆசிரியர் குழாமில் ஐந்து பேர் (ஆசிரியர் குழாமின் அங்கத்தவர்கள்) ;

(v) பாடசாலை ஆலோசனைக் குழுவின் தலைவர் அதிபராவார் ;

(vi) பாடசாலை அபிவிருத்தி குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் ஐந்து பேர் ;

(vii) மாகாண ஆலோசனைக் குழுவின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகத்தின் கீழ் மாகாண ஆலோசனைக் குழுவின் எந்தவொரு செயற்பாட்டையும் நடைமுறைப்படுத்துவதற்காக மற்றும் கல்வியின் எந்தவொரு துறை தொடர்பாகவும் உப குழுவொன்றை நிறுவும் அதிகாரம் மாகாண ஆலோசனைக் குழுவுக்குரியது. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் உப குழு விசேட துறைகள் தொடர்பாக வேறு உப குழுக்களை நியமிக்கும் ஆற்றல் கொண்டது.

7. எந்தவொரு விண்ணப்பதாரியினதும் அல்லது அவரது பெற்றோரினதும் சமயம், இனம், குலம், சமூக அந்தஸ்த்து அல்லது மொழி என்பவற்றைக் காரணமாகக் கொண்டு அவ்விண்ணப்பதாரியை பாடசாலைக்கு உள்வாங்குதல் நிராகரிக்கப்பட முடியாது.

8. பாடசாலைக் கட்டடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், அலுவலகம் அல்லது அலுவலக காணி என்பவற்றை அமைப்பது தொடர்பாக அல்லது அவற்றை விசாலப்படுத்துவதற்காக அவ்வாறே பாடசாலைக்குரிய விளையாட்டு மைதானம் அமைத்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக அல்லது இவ்யாப்பின் எந்தவொரு செயற்பாடுகளுக்காகவும் அல்லது ஏதாவதொரு தனியார் காணி தேவைப்படும் எனத் தெரியவரின் அக்காணியை நடைமுறையிலுள்ள மாகாணக் காணிச் சட்டத்திட்டங்களுக்கேற்ப சுவீகரிக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு உண்டு.

9. (i) மாகாண அமைச்சின் அதிகாரத்தின் கீழ் இருக்கும் எந்தவொரு பாடசாலையிலும் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக எந்தவொரு நிதியும் சேகரிக்க முடியாது ;

(ii) இலக்கம் 1 உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவைக்கு மேலதிகமாக விளையாட்டு, உடற் பயிற்சி, கல்வி, பொழுதுபோக்குகள் அல்லது சுகாதார நடவடிக்கைகள் என்பவற்றுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக செலவாகும் நிதிக்காக எந்தவொரு பாடசாலையிலும் மாணவர்களிடம் கட்டணம் அல்லது கட்டணங்கள் அறவிடுவதற்காக தேவையான அதிகாரத்தையளிக்கும் ஏற்பாடுகளை விதிப்பதற்காக இந்த பட்டயத்தின் கீழ் இடமுண்டு.

10. அமைச்சர் அல்லது பணிப்பாளர் அல்லது அமைச்சின் அல்லது திணைக்களத்தின் எந்தவொரு அதிகாரியும் அல்லது அமைச்சர் அல்லது பணிப்பாளர் அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எந்தவொரு பாடசாலைக்கும் உட்சென்று அதன் செயற்பாடுகளை அல்லது சொத்துக்களை பரீட்சிப்பது சட்ட ரீதியானதாகும்.

11. மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு உதவுதல், அவர்களை அபிவிருத்தி செய்தல், அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தல் போன்றவற்றுக்காக கல்வி நிதியமொன்று அமைக்கப்படுவதுடன் அந்நிதியத்தை நிர்வகிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை விதித்தல் அமைச்சர் அவர்களினால் மேற்கொள்ளப்படும்.

## பகுதி - II

பிரமாணங்களை விதிப்பதற்காக அமைச்சருக்கு உள்ள அதிகாரங்கள்

12\. 1. இவ் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பிரமாணங்களை விதிக்க அமைச்சருக்கு முடியும். அத்துடன் இவ்வாறு விதிக்கப்படுகின்ற பிரமாணங்கள் எழுத்துமூல சட்டப்பெயரால் அறிமுகம் செய்யப்படும்.

2\. விசேடமாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக பிரமாணங்களை விதிக்க அமைச்சருக்கு முடியும் :

I. தேசிய பாடசாலைகள், பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தருக்குள்ள விஷேட பாடசாலைகள், விசேட அபிவிருத்தி வேலைத் திட்டம் என்பவற்றுக்காக வேறுபடுத்தப்பட்டுள்ள பாடசாலைகள் ஆகிய இப்பாடசாலைகள் தவிர ஏனைய சகல மாகாண சபை பாடசாலைகளுக்கும் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் ;

II. மேலே 12.(2) 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட பாடசாலைகள் தவிரந்த ஏனைய மாகாண பாடசாலைகள் மற்றும் சகல முன் பள்ளிப்பருவ பாடசாலைகள் என்பவற்றை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ;

III. கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் சேவைக்கு மற்றும் அது தொடர்பான ஏனைய சேவைகளுக்கான ஆளணிகளை ஆட்சேர்ப்பு செய்தல் ;

IV. 1 A, B மற்றும் 1 C பாடசாலைகள் தவிர ஏனைய சகல பாடசாலைகளுக்கும் அதிபர்களை நியமித்தல் ;

V. கல்வித் துறையைச் சார்ந்த அனைவரினதும் இடமாற்றம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு ;

VI. மாகாணக் கல்வி அபிவிருத்தித் திட்டம், கோட்டக் கல்வி அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தலும் செயற்படுத்தலும் ;

VII. வருடாந்த கல்வி அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தல் ;

VIII. அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்விசார் ஊழியர்கள் ஆகிய அனைத்து உத்தியோகத்தர்களினதும் சேவைகளைப் பாராட்டுதல் ;

IX. சேவைக்காலப் பயிற்சி வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல் ;

X. பரீட்சை ஆணையாளர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட பிரதேச ரீதியான பரீட்சைகளை நடாத்துதல் ;

XI. முறைசாரா கல்வித் திட்டங்களை செயற்படுத்துதல் ;

XII. முன்பள்ளிகளை பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும் ;

XIII. ஆரம்பநெறி பாடத் திட்டம் மற்றும் இடைநிலை பாடத்திட்டங்கள் என்பவற்றில் தெரிவு செய்யப்பட்ட பாடங்களில் பிரதேச மட்ட வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி நிறுவகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் ;

XIV. கல்விசார் கட்டடங்கள், நூலகங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அமைத்தலும் பராமரித்தலும் ;

XV. கற்பித்தல் சாதனங்கள், கற்புல மற்றும் செவிப்புல சாதனங்கள், மரத்தளபாடங்கள் ஏனைய உபகரணங்கள் பெற்றுக்கொள்ளலும் பகிர்ந்தளித்தலும் ;

XVI. விஞ்ஞான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளலும் பகிர்ந்தளித்தலும் ;

XVII. அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு பாடசாலைப் புத்தகங்களை ஆக்குதலும் பகிர்ந்தளித்தலும் ;

XVIII. தேசிய நூலக சேவை சபையின் வழிகாட்டலின் பிரகாரம் பாடசாலை நூலகங்களை ஏற்பாடு செய்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

XIX. மாகாணத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு கோட்டக் கல்விக் காரியாலயத்தினதும் எல்லையைத் தீர்மானித்தல் ;

XX. மாகாண பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல், பாடநெறிகள் மற்றும் கல்வி வேலைத் திட்டங்களின் கீழ் மேலதிக வாசிப்புப் புத்தகங்கள் மற்றும் பாவிக்கக்கூடிய உபகரணங்கள் ;

XXI. மாகாணத்தின் சகல பாடசாலைகளில் அல்லது பெயர் குறிப்பிட்ட பாடசாலைகளில் அல்லது ஒரு வகுப்பில் வகுப்புக்கள் நடாத்தப்படவேண்டிய திகதி, காலம் மற்றும் விடுமுறை தினங்களை தீர்மானித்தல் ;

XXII. பாடசாலை மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை அல்லது வைத்தியம் செய்தல் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் இலவச உணவு, புத்தக விநியோகம் உள்ளடங்கலாக மாணவர் நலன்புரி நடவடிக்கைகள் ;

XXIII. நிரல் அமைச்சின் மூலம் பின்பற்றப்படுகின்ற கொள்கைகளுக்கும், தரத்திற்கும் ஏற்ப மாகாண பாடசாலைகளை தரப்படுத்துதல், உயர்த்துதல், வகைப்படுத்துதல் மற்றும் புதிய பாடசாலைகளை ஆரம்பித்து வைத்தல் ;

XXIV. மாகாணத்தின் முதியோர் கல்வி தொடர்பான திட்டம் அமைத்தலும் செயற்படுத்தலும் ;

XXV. மாகாணத்தின் கல்வித் தேவைகளை எதுவித குறுக்கீடுகளுமின்றி நடைமுறைப்படுத்தும் நோக்குடன் மாகாண வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தலும் நிதி நிர்வாகமும் ;

XXVI. பிரமாணங்களை விதித்தலுக்கு பொருத்தமென அமைச்சர் கருதும் வேறு முக்கிய விடயங்கள்.

3. இவ்யாப்பின் கீழ் தயாரிக்கப்படுகின்ற சகல பிரமாணங்களும் மாகாண சபையின் அனுமதி கிடைத்ததன் பின் செல்லுபடியாகும்.

## பகுதி - III

பொது

13. 1. நிலவும் பிரகாரம் வேறு பொருள் வழங்கப்படாவிடின் இந்த யாப்பில் குறிப்பிடப்படுவதற்கு ஏற்ப:-

"ஆளுநர்" என்பது, வடமத்திய மாகாண ஆளுநர் அவர்களாகும் ;

"முதலமைச்சர்" என்பது, வடமத்திய மாகாண முதலமைச்சராகும் ;

"அமைச்சர்" என்பது, வடமத்திய மாகாண கல்விக்குப் பொறுப்பான அமைச்சராகும் ;

''செயலாளர்'' என்பது, வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகும்.

''பணிப்பாளர்'' என்பது, வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அல்லது இவ்யாப்பின் கீழ் கல்விப் பணிப்பாளரின் அதிகாரத்தின்படி பணிப்பாளரின் அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு அல்லது கடமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு திணைக்கள அதிகாரியும் ;

''திணைக்களம்'' என்பது, வடமத்திய மாகாணக் கல்வித் திணைக்களமாகும்.

''மாகாண ஆலோசனைக் குழு'' என்பது, 4 (i) பந்தியின் கீழ் அமைக்கப்படுகின்ற மாகாண ஆலோசனைக்குழு ;

''கோட்ட ஆலோசனைக் குழு'' என்பது, 5 (i) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைக் குழு.

''பாடசாலை ஆலோசனைக் குழு'' என்பது, 6 (i) பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சபை ;

''கல்வித் தேவைகள்'' என்பது, பிரமாணங்களின் மூலம் வெளியிடப்படுகின்ற போதியளவு மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளுக்கான தேவையான வசதிகள்.

2. அவ்வாறு இல்லையென நிரூபிக்கப்படாதவிடத்து ஒரு பிள்ளை பொதுவாக தங்கியிருக்கக்கூடிய இடத்தின் நிரந்தர வதிவாளருக்கே அப்பிள்ளையின் உரிய பொறுப்பு உரித்துடையதாகும் எனக் கொள்ளப்படும்.

6- 825

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.